டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 17.01.2025 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 21 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 173 - Madurai | Online Edition

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

# தேசிய மஞ்சள் வாரியம் அமைக்கப்பட்டிருப்பது விவசாயிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும்!

## பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு

புது தில்லி, ஜன.16

தேசிய மஞ்சள் வாரியம் நிறுவப்பட்டதைப் பாராட்டியுள்ள பிரதமர் நரேந்திர மோடி, மஞ்சள் உற்பத்தியில் புதிய கண்டுபிடிப்புகள், உலகளாவிய மேம்பாடு, மதிப்புக் கூட்டுதல் ஆகியவற்றுக்கான சிறந்த வாய்ப்புகளை இது உறுதி செய்யும் என்று கூறியுள்ளார்.

மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் வெளியிட்ட சமூக ஊடக எக்ஸ்



தளப் பதிவுக்கு பதிலளிக்கும் வகையில் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது :

'தேசிய மஞ்சள் வாரியம் நிறுவப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. குறிப்பாக நாடு முழுவதும் கடினமாக உழைக்கும் நமது மஞ்சள் விவசாயிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும் செய்தி!

இது மஞ்சள் உற்பத்தியில் புதிய கண்டுபிடிப்புகள், உலகளாவிய மேம்பாடு, மதிப்பு கூட்டுதல் ஆகியவற்றுக்கான சிறந்த வாய்ப்புகளை உறுதி செய்யும். இது விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்தி, விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் சீராகப் பயனளிக்கும்.'

இவ்வாறு பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# ராபி பயிர் விதைப்பு 632 லட்சம் ஹெக்டேரைத் தாண்டியது

புது தில்லி, ஜன.16

வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை 14.01.2025 நிலவரப்படி ராபி பயிர்கள் விதைப்புப் பரப்பளவின் முன்னேற்றத்தை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலத்தில் 315.63 லட்சம் ஹெக்டேராக இருந்த கோதுமை சாகுபடி பரப்பு இப்போது 320 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

139.81 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. சிறுதானியங்கள் 53.55 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பொங்கல் விழா

கோயம்புத்தூர், ஜன.16

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் 14.1.25 அன்று பொங்கல் விழா பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

அதிகாலை 6.00 மணியளவில் பல்கலைக்கழகத் துணைவேந்தரை மத்திய பண்ணை வளாக தொழிலாளர்கள் மரியாதை நிமித்தமாக சாரட்டு வண்டியில் அழைத்துச் சென்றனர். பின்னர் மத்திய பண்ணையில் மகளிர் உடன் இணைந்து



பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி மற்றும் பல்கலைக்கழக பயிர் மேலாண்மை இயக்குனர் முனைவர் கலாராணி ஆகியோர் பச்சரிசி இட்டு பொங்கல் வைத்தனர். அதைத்தொடர்ந்து நடைபெற்ற பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டனர்.

பின்னர் பசு மாட்டிற்கு வழிபாடு செய்து பட்டியில் வலம் வரச் செய்து பட்டி மிதிக்க வைத்தனர். இதில் பசுமாடானது முதலில் தண்ணீரிலும் அதைத் தொடர்ந்து நவதானியங்களிலும் கால் வைத்தது. இந்நிகழ்வு விவசாயத்தின் பெரும் வளர்ச்சியினையும், விவசாய வளர்ச்சிக்கான ஆதாரம் நல்ல முறையில் இருப்ப தாகவும் ஐதீகமாக என கருதப்படுகிறது.

நிறைவாக பண்ணை தொழிலாளர்களுக்கு புத்தாடைகள் மற்றும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கி பல்கலைக்கழக சார்பாக தைத்திருநாள் நல்வாழ்த்துக் களை தெரிவித்துக் கொண்டார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# கோவை மண்டல உயிர்மச்சான்று விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை

கோயம்புத்தூர், ஜன.16

கோவை மண்டலத்தில் தேசிய வேளாண் கரிம உற்பத்தி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு உயிர்மச் சான்று துறையில் மொத்தம் 168 விவசாயிகள் பதிவு மேற்கொண்டு உயிர்ம விவசாயம் மேற்கொண்டு வருகிறார்கள். இதில் கோவை மாவட்டத்தில் 148 விவசாயிகள் 785 ஹெக்டேர் பரப்பளவிலும் நீலகிரி மாவட்டத்தில் 19 விவசாயிகள் 270 ஹெக்டேர் பரப்பளவில் தேசிய வேளாண் கரிம உற்பத்தி திட்டத்தின் கீழ் சான்றிதழ் பெற்று உயிர்ம விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர்.




கோவை மண்டலத்தில் மொத்தம் உள்ள 168 விவசாயிகளில் 70 பேர் மாறுதல் காலம் முடிந்து உயிர்மநிலை அடைந்து உயிர்ம விவசாயிம் மேற்கொண்டு வருகின்றனர். அவ்வகையில் கோவை மற்றும் நீலகிரி மாவட்டத்தில் தேசிய வேளாண் கரிம உற்பத்தி திட்டத்தின் விதிமுறைகளை முறையாக டைபிடித்து உயிரம நிலை அடைந்த விவசாயிகள் ஊக்குவிக்கும் பொருட்டு தகுதியான 27 விவசாயிகள் தமிழ்நாடு உயிர்மச் சான்று துறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்வகையில் இன்று கோவை மாவட்ட விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்று உதவி இயக்குனர் மாரிமுத்து தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கோவை மண்டலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 27 விவசாயிகளல் 4 விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

மீதமுள்ள 22 விவசாயிகளுக்கு உங்கி கணக்கில் ஊக்கத் தொகை செலுத்தப்படும் என்று விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்று உதவி இயக்குர் தெரிவித்தார்.

கூட்டத்தில் கோவை மாவட்ட உயிர்மச் சான்று அலவலர் மகஷே்வரன் மற்றும் விதைச்சான்று தொழில்நுட்ப அலுவலர் சதாசிவம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 16.01.2025

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 36 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 32 | 38 | 57 | உருளை (பிற) | 30 | 36 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 30 | 56 |
| 2 | வெண்டை | 45 | 50 | 58 | மேரக்காய் | 22 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 20 | 22 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 40 | 44 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 15 | 18 | 60 | கேரட் | 50 | 60 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 80 | 85 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 50 | 60 |
| 6 | புடலை | 35 | 40 | 62 | நூல்கோல் | 35 | 40 |
| 7 | பீர்க்கன் | 50 | 54 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 25 | 30 | 64 | மு.கோஸ் | 22 | 26 |
| 9 | பாகற்காய் | 35 | 40 | 65 | | | |
| 10 | கொத்தவரை | 44 | 50 | 66 | காளிபிளவர் | 35 | 40 |
| 11 | பூசணி | 14 | 18 | 67 | பட்டாணி | 60 | 70 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 200 | 288 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 40 | 44 | 69 | இஞ்சி | 40 | 46 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 50 | 60 | 70 | புருக்கோலின் | 170 | 180 |
| 15 | சி.வெங்காயம் | 74 | 80 | 71 | பென்னி பீன்ஸ் | 65 | 70 |
| 16 | பெ.வெங்காயம் | 33 | 38 | 72 | குடமிளகாய் | 60 | 65 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 40 | 46 | 73 | ஊட்டி அவரை | 130 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 80 | 86 | 74 | | | |
| 19 | முருங்கை | 110 | 130 | 71A | | | |
| 20 | தேங்காய் | 60 | 64 | | | | |
| 21 | மாங்காய் | 100 | 105 | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 44 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 44 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 60 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 60 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 30 | 36 |
| 28 | கறிவேப்பிலை | 74 | 78 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 25 | 30 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 9 | 10 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி&பாலாக்கு | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | வெந்தயக்கீரை | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 50 | 55 |
| 40 | கோவக்காய் | 50 | 55 | 91 | பூவன் | 40 | 44 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 38 | 42 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 25 | 30 | 96 | நேந்திரன் | 70 | 75 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 35 | 40 | 97 | செவ்வாழை | 80 | 90 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | | |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 30 | 34 | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 30 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | 103 | Seedless திராட்சை(ப/க) | 140 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 30 | | விளாம்பழம் | 70 | 80 |
| 55A | துவரை | 60 | 66 | | அத்திப்பழம் | 160 | 170 |
| 55B | மஞ்சள் கொத்து | 10 | 30 | | வாட்டர் ஆப்பிள் | 80 | 90 |

# காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் கட்டண பயிற்சி ஜனவரி 29ஆம் தேதி நடக்கிறது

திருச்சி, ஜன.16

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கிராமப்புற இளைஞர்கள், பெண்கள் தொழில்முனைவோராக பல்வேறு பயிற்சிகள் அவ்வப்போது நடைபெற்று கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக வருகின்ற ஜனவரி 29 ஆம் தேதி புதன்கிழமை அன்று காளான் வளர்ப்பு குறித்த சான்றிதழ் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

பல்வேறு வகையான காளான்களை கண்டுபிடித்தல், அவற்றை வளர்க்கும் முறைகள், நிர்வாகம், வணிக காளான் வளர்ப்பு செயல் விளக்கம், காளான் வளர்ப்பில் அனுபவம் வாய்ந்த தொழில் முனைவோர்களின் சொற்பொழிவு, சந்தை தகவல், காளானில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் தயாரிப்பு முறைகள் போன்றவை.

பயிற்சியானது காலை 9.30 மணி முதல் 5 மணி வரை நடைபெறும். ஜனவரி 28ஆம் தேதி செவ்வாய்கிழமை வரை பதிவு செய்பவர்கள் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு பயிற்சி கையேடு, பயிற்சி சான்றிதழ் மதிய உணவு வழங்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று காலை 9 மணிக்கு வருகை புரிந்து பயிற்சி கட்டணம் ரூ.590/- நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் ஷீபா ஜாஸ்மினை காலை 9 மணி முதல் மாலை 5 மணிக்குள் தொலைபேசி எண் : 0431-2962854, 81225 86689 தொடர்பு கொள்ளலாம்.

பயிற்சிக்கு முன்பதிவு அவசியம்.

மேற்கண்ட தகவலை சிறுகமணி வேளாண்மை அறிவியல் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு (91717 17832) தெரிவித்தார்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# மார்கழிப்பட்ட நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பம்

மார்கழிப்பட்ட நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குனர் பா.கார்த்திகாயினி கூறியுள்ளதாவது,

**அடியுரம் – ஒரு எக்டருக்கு**

- தொழு உரம் – 12.5 டன்
- தழைச்சத்து – 25 கிலோ
- மணிச்சத்து – 50 கிலோ இறவை
- சாம்பல் சத்து – 75 கிலோ
- நுண் உரக் கலவை – 12.5 கி.கி
- நிலக்கடலை ரிச் – 5 கி.கி/எக்டர்/500 லிட்டர்–45 ஆம் நாள்

**விதை அளவு**

- விதைப்பருப்பு–125 கிலோ/எக்டர்
- பெரிய பருப்பு இரகங்களுக்கு – 175 கிலோ/எக்டர்

**விதை நேர்த்தி**

- டிரைக்கோடெர்மா விரிடி – 4 கிராம்/கிலோ விதை அல்லது
- சூடோமோனஸ் ஃபுளுரசன்ஸ் 10 கிராம்/கிலோ விதை அல்லது
- திரம்/மானகோசெப்–4 கிராம்/ கிலோ விதை அல்லது
- கார்பாக்ஸின்/ கார்பன்டசிம் – 2 கிராம்/கிலோ விதை
- திரவ உயிர் உரம் ரைசோபியம் – 125 மி.லி மற்றும் பாஸ்போ பாக்டீரியா – 125 மி.லி/எக்டர்

**விதைப்பு இடைவெளி**

- வரிசைக்கு வரிசை 30 செ.மீ. மற்றும் செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளி

தலைக் கவசம் உயிர்க் கவசம்

**ஜிப்சம் இடுதல்**

- விதைத்த 40-70ம் நாளில் மண்ணில் ஈரம் இருக்கும் போது ஜிப்சம் 400 கிலோ/ எக்டர் இட்டு மண் அணைக்க வேண்டும்.

**நீர்ப்பாசனம்**

- 4-6 நாட்களுக்கு ஒரு முறை

**களை நிர்வாகம்**

- விதைத்த 3-ஆம் நாள் பெண்டிமெத்திலின் - 3.3 லிட்டர்/ எக்டர் 500 லிட்டர் தண்ணீர்

**ஊட்டச்சத்துக் கலவை தெளிப்பு**

- நிலக்கடலையில் பெரிய பருப்புகள் கொண்ட இரகங்களில் காய்களின் பருப்பின் வளர்ச்சி குறைபாட்டினை தவிர்த்து நல்ல வளர்ச்சி அடைந்த முழுமையான பருப்புக்களை பெறுவதற்கு பல ஊட்டச்சத்துக்களை கலந்து தெளிக்க வேண்டும்.




- இந்த கலவையை தயாரிக்க டி.ஏ.பி 2.5 கிலோ, அம்மோனியம் சல்பேட் 1 கிலோ மற்றும் போராக்ஸ் (வெண்கரம்) 0.5 கிலோவினை 37 லிட்டர் தண்ணீரில் ஒன்றாக கலந்து ஒரு இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டும்.

- மறுநாள் காலை அந்த கலவையை வடிகட்டினால் 32 லிட்டர் வரை தெளிந்த ஊட்டச்சத்து நீர் கிடைக்கும். இதனை 468 லிட்டர் தண்ணீருடன் சேர்த்து 500 லிட்டர் அளவில் தயார் செய்ய வேண்டும்.

- இதனுடன் பிளானோபிக்ஸ் 350 மில்லியை இதில் சேர்த்து விதைத்த 25 மற்றும் 35-ம் நாட்களில் தெளிக்க வேண்டும்.

**பூச்சிக் கட்டுப்பாடு**

**இலைப்பேன்** - குயின்னால்பாஸ் மருந்து 2 மி.லி/லிட்டர் அல்லது வேப்ப எண்ணெய் 2% அல்லது இமிடாகுளோபிரிட் 100 மி.லி /எக்டர்.

**சிலந்திப்பேன்** – புரப்பர் கைட் மருந்து 2 மி.லி

**புரட்டுனியா புழு**– ஆமணக்கு வரப்புப் பயிர் மற்றும் என்.பி.வி வைரஸ் (3x1012 PoB/எக்டர்) ஊடுபயிர் (அவரை + நிலக்கடலை – 1:4)

**நோய் கட்டுப்பாடு**

- டிக்கா இலைப்புள்ளி – டெபுகோனாசோல் – 1.5 மி.லி

- அடித்தண்டழுகல் / கழுத்தழுகல் நோய் – கார்பாக்சின் திரம் 4 கிராம் / 1 கிலோ விதை கொண்டு விதை நேர்த்தி

**அறுவடை– 120 நாட்கள்**

- முதிர்ந்த இலைகள் காய்ந்துவிடும் மற்றும் மேல்மட்ட இலைகள் மஞ்சளாவதும் முதிர்ச்சியைக் குறிக்கும்.

# எஸ்.ஆர்.எம். வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள் நடத்திய கண்காட்சி



செங்கல்பட்டு, ஜன.16

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அடுத்த பாபுராயன்பேட்டை எஸ்.ஆர்.எம். வேளாண் அறிவியல் கல்லூரி முதல்வரின் அறிவுரைபடி, கல்லூரி உதவி பேராசிரியர் களின் வழிகாட்டலின் கீழ் வேளாண்மை பயிலும் இறுதி ஆண்டு மாணவியர் 12 பேர் அடங்கிய ஜேம்ஸ் ஸ்டுவர்ட் குழு 'கிராம தங்கல் திட்டத்தின்' ஒரு அங்கமாக காட்டுதேவாதூர் அம்மன் கோவிலில் மக்களுக்காக கண்காட்சி நடத்தினர். இக்கண் காட்சிக்கு தேவையான மர விதைகளை காட்டுதேவாத்தூரில் சேகரித்தனர். பின்னர், ஓணம்பாக்கத்தில் உள்ள கீரை வகைகளை சேகரித்து உணவுப் பொருட்களாக சமைத்து கண்காட்சியில் வைத்தனர். கால்நடைகளுக்கு தேவையான மூலிகை சார் சிகிச்சை முறைகளை மக்களுக்கு விளக்கி கூறினார். இக்கண்காட்சியில் மாணவிகள் அப்பொருட்களின் நன்மைகள் மற்றும் பயன்களை எடுத்துரைத்தனர். அதனை மக்கள் ஆர்வத்துடன் கண்டுகளித்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தைத்திருநாளாம் பொங்கல் அன்று காப்பு கட்டும் பூவின் சிறப்பு தெரியுமா?



தைப்பொங்கல் நாளில் அனைவரின் வீடுகளின் தலைவாசலில் காப்பு கட்டுவது தமிழர்களின் மரபாக உள்ளது. பொங்கல் பூ என்று அழைக்கப்படுகின்ற கண்ணுபிளை செடி‘ சிறுகண்ணுபிளை, காப்பு செடி என்றும் அழைக்கப்படுகின்றது.

இதனுடைய அறிவியல் பெயர் (AERVA LANAITA) சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட 99 வகை மலர்களில் இந்த பூவும் ஒன்று. இது மருத்துவ குணமுள்ள வெண்மையான கண்ணில் வடியும் பிளை போன்ற இருப்பதால் இதற்கு கண்ணுப்பிளை காரண பெயராகவும் இருக்கலாம்.

**காப்பு கட்டுதல்**

தமிழர்களின் பண்பாடு எந்த ஒரு நல்ல காரியத்தை தொடங்கும் முன் (திருவிழா) இறைவனை வணங்கி காப்பு கட்டுவது பாரம்பரியமாக கடைபிடிக்கப்பட்டு இன்று வரை தொடர்கிறது என்பதை நாம் அறிந்ததே. அந்த வகையில் மார்கழி மாதம் முடிந்து தை பிறக்கும் நன்னாளில் அதிகாலையிலேயே வீடுகளின் தலைவாசலில், வேப்பிலை, மா இலை, ஆவாரம்பூ இவற்றுடன் இந்த கண்ணுப்பிளை செடியும் சேர்த்து கட்டி ஈசானிய முலையில் தொங்க விடுவார்கள்.

மார்கழியில் (பழையன கழிதலும்) தையில் (புதியன புகுதலு மாக) இருக்கும் உழவர்களின் அறுவடை நாளாக கொண் டாப்பட்டு வருகிறது. ஆடியில் கடன் வாங்கி விதை விதைத்து தையில் வருமானத்தை பார்க்க கூடிய நாளாக மாறும். இதனால் அவர்களுடைய வாழ்வில் வசந்தமும் வளமும் ஓரே சேர கிடைக்கும்.

**காப்பு செடிகளின் பயன்கள்?**

காப்பு செடிகளான வேப்பிலை, மாவிலை, ஆவாரம்பூ, கண்ணுப்பிளை இவை 4 நான்கும் மருத்துவ குணமுள்ளது. அந்த காலத்தில் மருத்துவ வசதி இல்லாத காலத்தில் வீட்டு வாசலில் அவசர மருத்துவ சேவைக்கு பயன்படுத்துபடும்.

**1) வேப்பிலை.** நோய் எதிர்ப்பு ச்சக்தியை கொடுக்கும். இன்றைய கால கட்டத்தில கூட வைரஸ் போன்ற அம்மை நோய் வந்தால்கூட அந்த வீட்டில் கட்டி தொங்க விடுவார்கள்.

**2) மா இலை.** இது காற்றை சுத்தப்படுத்தி காற்று மண்டல த்தில் ஆக்ஸிஜன் செறிவை அதிகரிக்க உதவும்.

**3) ஆவாரம் பூ.** இந்த செடி சர்க்கரை நோயிலிருந்து காப்பாற்ற உதவும்.




**4) கண்ணுப்பிளை.** இந்த செடி சிறுநீரக பிரச்சனைக்குரிய அரு மருந்தாக பயன்படும்.

நம்முடைய முன்னோர்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலும் முக்காலத்திற்கும் ஏற்றதாக உள்ளது என எண்ணிப் பார்க்கையில் நமக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா. காரியம் பயன்பாடு இன்றி எந்த ஒரு செயலை நம்முடைய முன்னோர்கள் செய்தாக தெரியவில்லை. இன்றைய கால கட்டத்தில கூட இந்த நடைமுறை நம்முடைய வீடுகள் நிலங்கள் வாகனங்களில் கூட காப்பு கட்டும் நடைமுறை தொடர்கிறது. தொடரும், தொடர வேண்டும் என்பதை நம்புவோம். தமிழர்களின் கலாச்சார பண்பாட்டை காக்க துணை நிற்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# வேளாண்மையில் புதுப்பிக்கவல்ல ஆற்றல் – சாண எரிவாயுக்கலன்!

கால்நடைக்கழிவு மற்றும் இதர அங்ககக் கூட்டுப்பொருள் களிலிருந்து காற்றில்லா உயிர் வேதியியல் மாற்றத்தின் மூலம் சாண எரிவாயு உற்பத்திச் செய்யப்படுகிறது. இந்தியாவில் உள்ள ஏறக்குறைய 300 மில்லியன் கால்நடைகளின் மூலம் தோராய மாக 3 மில்லியன் டன் சாணம் கிடைக்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள 9.5 மில்லியன் கால்நடைகளிலிருந்து பெறப்படும் சாணத்தைச் எரிவாயுவாக மாற்றுவதன் மூலம் சுமார் 2000 டன் நிலக்கரி பயன்பாட்டினைக் குறைக்கலாம்.

சாண எரிவாயுவானது, சமைப்பதற்கும், விளக்கு எரிக்கவும், வெப்ப ஆற்றல் மற்றும் மின் உற்பத்திச் செய்யவும் பயன்படு கிறது. சாண எரிவாயுவினைப் விறகிற்காக பயன்படுத்துவதன் மூலம் விறகிற்காக மரங்கள் வெட்டப்படுவதும் காற்று மாசு படுவதும் குறைக்கப்படுகிறது. ஒரு கனமீட்டர் கொள்ளளவு கலன் மூலம் 4 பேர் உள்ள குடும்பத்திற்கு வேண்டிய சமையலைச் செய்யலாம். சுமாராக ஒரு கனமீட்டர் கலனுக்கு ஒரு நாளுக்கு 25 கிலோ கிராம் சாணம் அல்லது சாணக் கரைசல் தேவைப் படும்.

ஒரு பசு நாளொன்றுக்கு சராசரியாக 10 கிலோ சாணத்தை இடுகிறது. ஒரு வீட்டில் 2 பசுக்கள் இருந்தால் அதன் மூலம் 20 கிலோ கிடைக்கும். எனவே கிடைக்கும் மொத்த சாணத்தின் அளவு = 20 கிலோ. ஒரு கிலோ கிராம் சாணத்திலிருந்து 0.04 கன மீட்டர் (அ) 40 லிட்டர் சாண எரிவாயு கிடைக்கிறது. 20 மு 0.04 கன மீட்டர் = 0.8 கன மீட்டர் சாண எரிவாயு. 2 0 X 40 லிட்டர் = 800 லிட்டர் சாண எரிவாயு கிடைக்கும். எனவே 1 கனமீட்டர் கொள்ளளவுடைய சாண எரிவாயுக்கலனைக் கட்டலாம்.

சாண எரிவாயுக்கலனிலிருந்து எரிவாயு தயாரித்த பின் வெளிவரும் செரித்த சாணக்கரைசலில் தழைச்சத்து 1.5 முதல் 2.5 சதவிகிதமும் சாம்பல் சத்து 1.0 முதல் 1.5 சதவிகிதமும், மணிச்சத்து 0.8 முதல் 1.2 சதவிகிதமும் உள்ளன. எனவே, செரித்த சாணக் கரைசலை இயற்கை உரமாகப் பயன் படுத்துவதன் மூலம் பயிர்களின் வளர்ச்சியைத் தூண்டி விளைச்சலை அதிகரிக்கச் செய்யலாம்.

செரித்த சாணக்கரைசலை நேரடியாகவோ அல்லது நீர்ப்பாசன வாய்க்கால்கள் மூலமாகவோ பயிர்களுக்குப் பயன்படுத்தலாம். செரிக்கப்பட்ட கரைசலைப் பயிர்களுக்கு உரமாகப் பயன்படுத்து வதால் பொருட்களின் விளைச்சல் அதிகமாகவதாக கண்டறியப் பட்டுள்ளது என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சாகுல் அமீத் தெரிவித்தார்.

# விவசாயிகளுக்கு வேளாண்மை குறித்த செயல்விளக்கமளித்த எஸ்.ஆர்.எம் வேளாண் கல்லூரி மாணவர்கள்



செங்கல்பட்டு, ஜன.16

செங்கல்பட்டு மாவட்டம், பாபுராயன்பேட்டையில் இயங்கி வரும் எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரியை சேர்ந்த அரிஸ்டாட்டில் குழு மாணவர்கள் 11 பேர் சுபி பாரத், கேசவ் நிவேஷ், கிசோர் குமார், ஹர்ஷித், சரண்குமார், சிவசங்கர், ஜெயசூர்யா, பரத், லோகநாதன், குகன், சஞ்சீவி குமார் ஆகியோர் கிராம வேளாண் பணி அனுபவத் திட்டத்தையொட்டி திருக்கழுக்குன்றம் ஒன்றியம் வெங்கப்பாக்கம் கிராம விவசாயிகளுக்கு வேளாண்மை குறித்த செயல்விளக்கம் நடத்தினர். இதில் எஸ்.ஆர்.எம் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் நெல் (ம) வேர்கடலை விதை நேர்த்தி, காட்டுப்பன்றி கட்டுப்படுத்தும் முறை, பழ ஈ கட்டுப்படுத்தும் முறை பற்றிய செயல்விளக்கங்களை விவசாயிகளுக்கு அளித்தனர்.

இந்நிகழ்வு 13 ஆம் தேதி மதியம் 12 மணியளவில் நடைபெற்றது. இந்த முகாமில் விவசாயிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு தங்கள் சந்தேகங்களை கேட்டறிந்தனர்.

இந்த நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் மற்றும் பாட ஆசிரியர்கள் மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் கோ.கா.தினேஷ் (வேளாண் சுற்றுச்சூழல் அறிவியல் துறை) ஆகியோரின் மேற்பார்வையில் நடைபெற்றது.

இச்செயல்விளக்கம் ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்கும் வகையில், விவசாயிகளுக்கு பயனுள்ள முறையில் அமைந்தது.

# கர்னல் ஜான் பென்னிகுக் பிறந்த நாளை முன்னிட்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது



மதுரை, ஜன.16

மதுரை, தல்லாகுளம், பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் உள்ள கர்னல் ஜான் பென்னிகுக் சிலைக்கு, அவரது 184 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் முல்லைப் பெரியாறு வைகை பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் எல்.ஆதிமூலம் தலைமையில் பெருந்திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர். மேலும், தமிழ்நாடு அனைத்து விவசாய சங்க ஒருங்கிணைப்பு குழு மாநில இளைஞரணி தலைவர் மேலூர் அருண், தென்மண்டல தலைவர் சிவகங்கை மாணிக்க வாசகம், மாடக்குளம் பாசன சங்க தலைவர் மாரிச்சாமி, இருபோக பாசானா சங்க நிர்வாகி குலமங்கலம் திருப்பதி, மதுரை மாவட்ட பொருளாளர் செல்லம், பேரையூர் முத்து மீரான், உக்கிர பாண்டி மற்றும் பல விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முல்லைப் பெரியாறு அணை மிகவும் பலமிக்கதாக இருக்கிறது. உச்சநீதிமன்ற தீர்ப்புப்படி 142 அடி நிலை நிறுத்தவும், பேபி அணையினை பலப்படுத்தி 152 அடியாக உயர்த்திடவும், தடையாக இருக்கும் மரங்களை அகற்றி வல்லக்கடவு பாதை வழியாக கட்டு மான பொருட்களை தங்கு தடையின்றி கொண்டு செல்லவும் அணை பராமரிப்பு பணிகளை தொடர்ந்து செய்திடவும், அன்னை தமிழ் படகுகளை இயக்கவும், முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மத்திய தொழில் பாதுகாப்பு படையிடம் ஒப்படைக்கவும், முல்லைப் பெரியாறு அணையின் எல்லாவிதமான நிர்வாக பொறுப்புக்களை தமிழ்நாடு அரசின் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வருவதும், அணைப்பகுதியில் பணிபுரியும் நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு மற்றும் அரசு அதிகாரிகளுக்கு உரிய பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும். அணைக்கு சொல்லும் டோல்கேட் மற்றும் வலக்கடவு டோல்கேட் உள்ளிட்ட நிர்வாக பொறுப்புகள் அனைத்தும் தமிழக அரசு கட்டுப்பாட்டில் வரவேண்டும். இதற்கு தடையாக இருக்கக்கூடிய மத்திய அரசு அணை பாதுகாப்புச் சட்டத்தில் இருந்து விலக்களித்து 2014 முல்லைப் பெரியாறு அணை உச்ச நீதிமன்ற தீர்ப்பை செயல்படுத்திட கேரளா அரசு, தமிழக அரசு, மற்றும் மத்திய அரசு முன்வர வேண்டும் என கோரிக்கையும் விடப்பட்டது என மேலூர் அருண், மாநில இளைஞரணி செயலாளர் தெரிவித்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# உயிர்ம வேளாண்மை : மண்ணை பொன்னாக்கும் பசுந்தாள், பசுந்தழை உரங்கள்

விவசாய நிலங்களில் தொடர் பயிர் சாகுபடியில் இரசாய உரங்களின அதிகரித்த பயன்பாட்டால் மண்ணின் வளம் நாளுக்கு நாள் குன்றி வருகிறது. மண்ணின் வளத்தைப் பாதுகாக்க இயற்கை உரங்களைப் பயன்படுத்துவது சிறந்த தீர்வாக அமையும். செயற்கை உரங்களால் குன்றிப் போன மண் வளத்தைப் பாதுகாக்க பசுந்தாள் உரப் பயிர்களை பயிரிடலாம்.

விவசாயத்தில் சாகுபடியை அதிகரிக்க வேண்டுமாயின் மண்ணின் வளம் நிறைவாய் இருப்பது இன்றியமையாத ஒன்று ஆண்டுக்கு ஒருமுறை பசுந்தாள் உரப் பயிர்களை பயிர் செய்தால் அது மண்ணின் வளத்தை மேம்படுத்தி, விளைச்சல் அதிகரிக்கவும் உதவும். உயிர்ம வேளாண்மையில் மண் வளத்தை காப்பதில் பசுந்தாள் மற்றும பசுந்தழை இயற்கை உரங்களின் பங்கு அதிகம்.

ஒவ்வொரு பயிர் சாகுபடியின் போதும் பசுந்தாள், பசுந்தழை இயற்கை உரங்களை நிலத்தில் இட வேண்டும். இவற்றை நிலத்தில் விதைத்து மடக்கி உழுவதன் மூலம் உரச் செலவின் தேவை குறையும்.

**பசுந்தாள் உரங்கள்**

பசுந்தாள் உரம் என்பது பயிறு வகைகை பயிரிட்டு, பின் போதமான வளர்ச்சி அடைந்தவுடன் பூப்பதற்கு முன் மண்ணில் உழ வேண்டும். பசுந்தாள் உரத்திற்காக வளர்க்கப்படும் பயிர்கள் பசுந்தாள் உரப்பயிர்களாகும். ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ ரைசோபியம் உயிர் உரம் ஒன்றரை லிட்டர் ஆறிய அரிசி அல்லது மைதா கஞ்சியுடன் 20 கிலோ தக்கைப்பூண்டு விதைகளை கலந்து அரை மணி நேரம் நிழலில் உலர்த்தி விதைக்கலாம். 45 முதல் 60 நாட்களில் பூக்கும் தருணத்தில் மடக்கி உழுவதால் 10 டன் பசுந்தள் கிடைக்கும்.

வேர்களில் வேர் முடிச்சுகளை உருவாக்கி காற்றிலுள்ள தழைச்சத்தை சேமித்து வைக்கிறது. அதன் பின் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கு நல்ல ஊட்டச்சத்து கிடைத்து அதிக மகசூல் தருகின்றன.

தக்கைப்பூண்டு, சணப்பு. கொளுஞ்சி, மணிலா, அகத்தி, கொத்தவரை மற்றும் நரிப்பயறு ஆகியவை முக்கிய பசுந்தாள் உரங்களாகும்.

**பசுந்தழை உரம்**

பசுந்தழை உரம் என்பது வேறு இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட இலைகள், மரங்களின் கொம்புகள், புதர்செடி, சிறு செடிகளை உபயோகித்தல் ஆகும். காட்டு மரங்களின் இலைகள் தான் பசுந்தழை உரத்தின் முக்கிய மூலதனம் ஆகும். பயிரிடப் படாத நிலங்கள், வயல் வரப்பு மற்றும் வேறு இடங்களில் வளரக் கூடிய செடிகளுகம் பசுந்தழை எருவிற்கான மற்றொரு ஆதாரம் ஆகும். பசுந்தழை உரத்திற்கு முக்கியமான செடி வகைகள் வேம்பு, இலுப்பை, கொளுஞ்சி, புங்கம், சுபா புல், எருக்கு, நொச்சி, கிளரிசிடியா போன்றவை பசுந்தழை உரங்கள் ஆகும்.

**பயன்கள்**

- மண் அமைப்பை மேம்படுத்தும்.
- மண்ணின் கரிமச்சத்து அளவு அதிகரிக்கின்றன.
- நீர்பிடிப்பு கொள்ளளவை அதிகப்படுத்தம்.
- மண் அரிப்பினால் ஏற்படும் இழப்பைக் குறைக்கும்.
- இவற்றை மடக்கி உழும்போது உருவாகும் அங்கக அமிலங்கள் மண்ணின் களர், உவர் தன்மையை குறைக்கிறது. காரத்தன்மையுள்ள மண்ணைச் சீர்திருத்துவதற்கு உதவுகிறது.
- பயிர்கள் எதுவும் பயிரிடப்படாத பருவத்தில் வளர்க்கப்படும், பசுந்தழை பயிர்களால் களைச் செடிகளின் வளர்ச்சியைக் குறைக்கலாம்.
- காரத்தன்மையுள்ள மண்ணைச் சீர்திருத்துவற்கு உதவுகிறது. வேர் முடிச்சு நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தலாம்.
- பசுந்தாள் உரம் கடினமான மண்ணில் நுண்துளைகளை ஏற்படுத்தி காற்று பரிமாற்றம், நீர் வடிகாலுக்கு உதவுகின்றன. இளக்கமான மண்ணில் நீர் இருப்புத்திறனை அதிகரிக்கிறது.

இதனை, சிவகங்கை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் சீ.சக்திகணேஷ் தெரிவித்தார்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com